பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA
89 A/L
நடைபெறுகிறது
கலை, வர்த்தக
வகுப்புகள்
WEEKEND CLASSES

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

NEW MASTER
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.
90 A/L
ஆரம்பம்:
10 - 07 - 88
கலை, வர்த்தக வகுப்புக்கள்
(WEEKEND CLASSES)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆனி மீ 17 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 16 ( 01 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 120

# வாக்குறுதி மட்டும் தர இந்தியா முயற்சி; அதனால் பேச்சுவார்த்தையில் தேக்க நிலை

### முச்சந்தி முரளி



அப்பாடா ஒரு விதமா ஜி. சி. ஈ. பரீட்சை நடக்கப் போறது பெரிய ஆறுதலாய்ப் போச்சு!

## 13 ஆவது அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருமாறு விடுதலைப் புலிகள் வற்புறுத்து

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

சென்னை, ஜூலை 1

ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கேட்கும் சில உரிமைகள், சலுகைகளை—

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடியும் வரை பொறுத்திருந்தால் மட்டுமே பெற்றுத்தர முடியும்— அதுவரை வாக்குறுதி மட்டுமே தரமுடியும்.

இவ்வாறு இந்திய அரசு - தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தரப்பில் தெரிவிக்கப் பட்டதாக அறியப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து இரு சாராருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் சிறு தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.

அதனாலேயே பேச்சுக்கள் நல்லதாக முடியும், அதன் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என்ற நிலையில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இதற்கிடையில் ஆயுதங்களை ஒப்படைப்பது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது சம்பந்தமாகச் சுமுகமான புரிந்துணர்வு நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை— இலங்கை அரசியல் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தில் பெரும் மாறுதல்கள், திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோரியுள்ளது.

டில்லியில் தங்களோடு பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படும் எருமைகள் எங்கே?

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ் குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படும் எருமை மாடுகள் மர்மமாக மறைந்து விடுகின்றன.

அந்த எருமைகள் எப்படி மறைகின்றன? செய்தியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

எருமைமாடுகளை தென்பகுதியில் பாரமான வேலைகளைச் செய்வதற்கும், உழுதல், சூடு மிதித்தல் போன்ற வேலைகளுக்கும் பெருமளவில் உபயோகப்படுத்துவது வழக்கம்.

ஆனால் வடபகுதியில் அவ்வாறான வேலைகளுக்கு மட்டுமல்ல, எந்த தேவைக்கும் எருமை மாடுகள் பயன்படுத்தப்படுவதில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜானகி நியூயோர்க் பயணம்

சென்னை, ஜூலை 1

அ. தி. மு. க. 'ஜா' அணியின் தலைவி திருமதி ஜானகி அம்மாள் நேற்று நியூயோர்க் பயணமானார்.

இருதயநோய்ச் சிகிச்சை பெறவே அவர் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

நியூயோர்க் புரூக்லின் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெறுவார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

பலாலியிலிருந்து காங்கேசனுக்கு

## இன்று பேரணி

காங்கேசன் துறை, மயிலிட்டி, தையிட்டி, ஊறணி, பலாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரசைகள் குழுக்களும், இப்பகுதி வர்த்தக நிறுவனங்களும், கடல் தொழிலாளர் சங்கங்களும் இணைந்து இன்று வெள்ளிக்கிழமைபேரணி ஒன்றை நடத்த உள்ளன.

உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். கடல்தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை உடனடியாக நீக்கவேண்டும் எனக் கோரியே இந்தப் பேரணி நடத்தப்படுகிறது.

பலாலியில் ஆரம்பமாகும் இப் பேரணி மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தும் மகஜரை காங்கேசன் துறையில் உள்ள இந்திய அமைதிப் படை முகாமுக்கு எடுத்துச்சென்று இராணுவ அதிகாரியிடம் கையளிக்கும் எனத் தெரியவருகிறது. (ஒ)

### சுபநேரம்

01 - 07 - 1988
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
5-56 முதல் 7-26 வரை
ராகுகாலம்:
10-26 முதல் 11-56வரை

## தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் வடக்கு - கிழக்கில் தேர்தல்

### ராஜீவுக்கு எழுதிய பதில் கடிதத்தில் ஜே. ஆர். வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 1

சகல ஆயுதங்கள், வெடிமருந்துகள், வானொலித் தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றை இலங்கை - இந்தியஇராணுவ அதிகாரிகளிடம் சொல்லப்பட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒப்படைத்தால்இலங்கைஅரசு வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய பதில் கடிதத்தில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ராஜீவ்காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா கடந்த வார இறுதியில் பிரதமர் ராஜீவுக்குப் பதில்அனுப்பினார்.

அந்தப் பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில்கடிதத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறியிருப்பதாவது:

ஆயுதங்களை ஒப்படைத்து ஒப்பந்தத்தைஏற்று ஜனநாயக வழிக்குத் திரும்பும் சகல போராளி அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்பதை அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

தடுப்புக் காவலில் உள்ள சகல கைதிகளும் உடனடியாக விடுவிக்கப் படுவர். அவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 1982 வாக்காளர் அடிப்படையில் தேர்தல்

லண்டன், ஜூலை 1

1982ஆம் ஆண்டு தேர்தல் வாக்காளர் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று இலங்கை அரசு உறுதியளித்து உள்ளது.

இதைத்தான் இலங்கை அரசு புதிய செய்தியாகத் தெரிவித்துள்ளது என்று பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

## அரசு பரிசீலனை செய்யும் ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு 1982 தேர்தல் இடாப்பை பயன்படுத்துவது பற்றிய பிரச்சினை அரசமைப்புச் சட்டத்துக்குட்பட்ட முறையில் அரசு பரிசீலனை செய்யும்.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 24ஆம் திகதிக்கும் 27ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையே கடிதப் போக்குவரத்து இடம்பெற்றதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## மூடும் நோக்கம் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஜூலை. 1

நேற்றைய உதயனில் வெளியான "வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் உயிர் ஊசலாட்டம்" என்ற செய்தி குறித்து மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் பின்வருமாறு அறிவித்துள்ளார்:—

வழமையாக நடைபெறும் மாநாடு இம்முறையும் நடைபெறுகிறது. தொடர்ந்து எடுக்க வேண்டிய முன்னேற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிக்கு வருபவர்களுக்கு ஓர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். ஆஸ்பத்திரிக்கு வரும் பெண் நோயாளர்களே! பார்வையாளர்களே! உங்கள் நகைகளில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்.

வெளிநோயாளர் பகுதியில் அடிக்கடி நகைக் களவுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## பல்கலைக்கழககவுன்சில் நாளை கூடுகிறது

### துணைவேந்தரைதெரிவுசெய்ய

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரைத்தெரிவு செய்வதற்காக பல்கலைக் கழகக் கவுன்சில் நாளை சனிக்கிழமை யாழ் பல்கலைக் கழகத்தில் கூடவுள்ளது.

ஏற்கனவே யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் சு. வித்தியானந்தன் இப்பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனைத் தொடர்ந்து பதில் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் மிரட்டல்கள் காரணமாகத் தமது பதவியை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜி. சி. ஈ. பரீட்சை ஆரம்பம்

## அமைதியாக நடைபெற ஒத்துழைப்பதாக உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 1

இன்று விசேட ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகிறது.

இப்பரீட்சை ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறத் தங்களால் ஆன உதவிகளையும் ஒத்தாசையையும் வழங்குவதாக அமைதிப்படையின் அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அனுமதிக் கார்ட் கிடையாத மாணவர் விவரம்

இன்று ஆரம்பமாகும் விசேஷ ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை மாணவர்களுக்கான அனுமதிக் கார்ட்டுக்கள் சில சரியான விலாசம் இன்மையால் கொக்குவில் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன. பெயர்ப்பட்டியலை 5ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

## ஓராண்டு நிறைவு நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்ட ஓராண்டு நிறைவுநாள் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகின்

( 6ஆம் பக்கம் பார்க்க )

ZELLERS
அதி சுவையூட்டும் மிகச் சிறந்த சொக்கிலேட்
★ ஸெல்லர்ஸ் ★
யாழ் குடாநாட்டின் ஸெல்லர்ஸ் சொக்கிலேட்டின் எமது ஏக விநியோகஸ்தர்கள் :
சரன்கா ஏஜென்சி
281-A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22896
ZELLERS CONFECTIONERIES LTD.
4, Jeyasingha Road, COLOMBO-6.
Tel : 552488
(4781)

C. V. T. Services
யாழ் கொழும்பு- யாழ்
தினசரி சொகுசு பஸ்சேவை
T. V. Deck பொருத்தப்பட்டுள்ளது.
3 ஆம் திகதி முதல்
யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது.
Booking Centres:-
Yarl Central Trader's
No. 11, Modern Market
Hospital Rd. Jaffna.
Tel:- 24003, 23736
R. B. Booking Centre
Modern Market, Jaffna.
(4792)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் ஹொண்டா C50, C90, 4 Cycle C 70, MD 70, MB 5 Racoon Gs 125 New Brand CB 250, எலெக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள் பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக் கொள்ளலாம். திருவாசி, அசையாமணி ஸ்தூபி குத்துவிளக்கு, கோயில் பொருட்களும் பித்தளை செம்பு, அலுமினியம், எவர் சில்வர் பொருள்களும் விநியோகித்தர்கள். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி. கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4748)

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ செட் பெல்ற், ICகள், சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களிற்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களிற்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

பாவித்த வீட்டு தளபாடங்கள் கட்டில் மெத்தைகள் கசற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அல்மாரி கடைசோகேஸ் கண்ணாடி மேசை கம்பளம், ஹோல்செற், விருந்தை கதிரைகள், ஸ்ரீல் அல்மாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அல்மாரி Imported Mattress மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் சந்தியருகில். [4588]

பாவித்த புத்தக கடைக்கு அல்லது (பார்மசி) மருந்துக் கடைக்கு பாவிக்கக்கூடிய இரண்டு பெரிய சோகேஸ்கள் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தி அருகில்.) (4587)

Hitachi Video Movie Camera (வீடியோடெக் கமராவுடன் சேர்ந்தது) 88ம் வருட மொடல், குறைந்த வெளிச்சத்திலும் சிறந்த படம் எடுக்கும். விற்பனைக்குண்டு. எவர்விஷன் 21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5593)

நல்லநிலையில் உள்ள இருமாதங்கள் பாவித்த 2'X3' குளிரூட்டி (Deep-Freezer) விற்பனைக்கு உண்டு. தொடர்பு 127, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (4862)

### வீடு வளவு விற்பனை

நாவலர் வீதியில் ஸ்ரான்லி கல்லூரிக்கு சமீபத்தில் நவீன வசதிகளுடன் மூன்று படுக்கை அறைகள் பொருந்திய வீடும் 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு c/o 259, உதயன் யாழ்ப்பாணம். (4859)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex Golden Comet பிறவுண் சேவல்குஞ்சுகள் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 2ஆம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா, அன்பிறதேர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (4865)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## தேவை

Commodore 64/Vic 20 Computer Keyboard Required C/o 257 உதயன் யாழ்ப்பாணம். [C/5584]

ஓர்ஓய்வுபெற்ற பெண் அதிபருக்கு சமைப்பதற்கும் வீட்டை நடத்துவதற்கும் 40 - 50 வயது இடைப்பட்ட ஓர்பணிப் பெண் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (4575)

கடைச்சல் வேலையில் (லேத்) நன்கு அனுபவம் உடையவர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்நொர்தேன் இன்டஸ்றிஸ் 69, பிறவுண் வீதி, கொக்குவில். (4853)

ஐஸ்கிறீம் வியாபார ஸ்தாபனத்திற்கு ரீமேக்கராகவும் சப்ளையர் ஆகவும் வேலை செய்யக் கூடியவர் தேவை. அவரின் வேலைக்கேற்ப மாதிரிசம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு நியூ ராஜா கிறீம் ஹவுஸ் அன் கபே இல. 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4860)

தெல்லிப்பளையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கோழிப் பண்ணைக்கு பொறுப்பாளர் தேவை. முன்றுமைல் சுற்றுடலில் வசிக்கும் 40 வயதுக்கு மேற்பட்ட பண்ணை பற்றிய முன் அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் 10-07-88 வரை ஏற்றுக்கொள்ளப்படும். C/o 171, உதயன் யாழ்ப்பாணம். (4595)

### மணமகள் தேவை

குருகுல இந்து வம்சத்தைத் சேர்ந்த லண்டனில் பொறியியலாளராக தொழில் புரியும் 36 வயதுடைய மணமகனுக்கு டாக்டர் கணக்காளர் அல்லது பட்டதாரி மணமகள் தேவை. புகைப்படத்துடனும் சாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். c/o 256, உதயன் யாழ்ப்பாணம். (4854)

### மணமகள் தேவை

யாழ்இந்து வேளாளர் 28 வயது பொறியியலாளருக்கு அழகிய பட்டதாரி மணப்பெண் தேவை. சகல விபரங்களுக்கும் c/o 258, உதயன் யாழ்ப்பாணம் முகவரிக்கு தொடர்புகொள்ளவும் சகல விபரங்களுடன் (4856)

### பெண்கள் தேவை

கற்பூரம் ஒட்டுவதற்கும், அடிப்பதற்கும் பெண்பிள்ளைகள் தேவை உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். செந்தூரன் தொழிற்சாலை கோபுரம் மார்க் கற்பூரம் கோகுலம் சுதுமலை வடக்கு, மானிப்பாய். (4864)

### கல்வி

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

### புவியியல் நூல்கள்

A/L வகுப்புக்குரிய அபிவிருத்திப் புவியியல் எறியங்கள் இரண்டினதும் புதிய பதிப்புகள் வெளி வந்துள்ளன. ஆக்கியோன் க. குணராசா பிரபல புத்தக சாலைகளில் பெறலாம். இலங்கைப் புவியியல் விரைவில் வெளிவரும். (4580)

### பயிற்சி

Radio-Tv Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டமெக்கானிசம் வைண்டிங் Typing புதியபிரிவுகள் குறுகிய காலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் ரோட், ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். (4574)

### திருமண சேவை

திருமணம் செய்து கொள்ளவேண்டுமா? எங்களிடம் இந்து-கிறிஸ்தவ மணமகன், மணமகள் இருக்கின்றனர். விபரங்களுக்கு Nico Traders 460, ஆஸ்பத்திரி வீதி, யூவானியர் (St.John's) ஆலயத்திற்கு அருகாமை யாழ்ப்பாணம். குருகுலத்தவரும் விண்ணப்பிக்கலாம். (4863)

### தவறிவிட்டது

கோண்டாவிலில் வசிக்கும் [திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில்] கந்தசாமிராஜனாகிய நான் எனது அடையாள அட்டையை அண்மையில் தொலைத்து விட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி/5599)

## கிளிநொச்சியில் அறிவியல் கருத்தரங்கு

தாளையடி, ஜூலை 1

கிளிநொச்சி கல்வித் திணைக்களமும், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயமும் இணைந்து கிளிநொச்சி ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களைக் கொண்டு இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இம்மாதம் 5ஆம் 6ஆம் 7ஆம் 8ஆம் திகதிகளில் காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கருத்தரங்குகள் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ- 144)

## கிளினிக்

கோப்பாய், ஜூலை 1

தாய்மார் குழந்தைகளுக்கான கிளினிக் கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில்புதன் கிழமைகளில் காலை நேரத்திலும் பொது மருத்துவப் பரிசோதனை செவ்வாய்க் கிழமைகளில் 2மணிக்குக்கும் நடைபெறும்.

இவ்வாறு கோப்பாய் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்தார். (சி-72)

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T.V. மின் விசிறிகள், மின் அடுப்புகள், மின் மோட்டார்கள், சுமீற், மொனிலேனக்ஸ் ஜெறைன்டர்கள், றைஸ்குக்கர், எலக்ரோனிக் கல்குலேற்றர், சுவர்மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், ஆகியவற்றை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

**விக்ரர் அன் சன்ஸ்**
**(விக்ரேஸ்)**
**இல. 100, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி 5595)

## சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய தொண்டர் சபையினால் 25-06-1988 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்.

| | இல:- | | இல:- |
|---|---|---|---|
| 1ம் பரிசு: | 916 | 9ம் பரிசு: | 2440 |
| 2ம் பரிசு: | 5107 | 10ம் பரிசு: | 3993 |
| 3ம் பரிசு: | 2014 | 11ம் பரிசு: | 2124 |
| 4ம் பரிசு: | 555 | 12ம் பரிசு: | 1480 |
| 5ம் பரிசு: | 2515 | 13ம் பரிசு: | 1324 |
| 6ம் பரிசு: | 6067 | 14ம் பரிசு: | 4896 |
| 7ம் பரிசு: | 6136 | 15ம் பரிசு: | 4654 |
| 8ம் பரிசு: | 047 | 16ம் பரிசு: | 4857 |

குறிப்பு:- ரிக்கற் இன்றி பரிசில்கள் வழங்கப்படமாட்டாது.

இங்ஙனம்:
**அம்பாள் தொண்டர் சபை**
(4785)

## CHARTERED ACCOUNTANCY
## LICENTIATE 1-EXAMS

பயிற்சி நெறி 2 பிரிவுகளாக ஆரம்பமாகி உள்ளது

Sept - 88 வாரநாட்கள்
March - 88 வார இறுதி நாட்கள்

" Students Registrations " எம்மால் கையாளப்படும்.

விபரங்கட்கு.

**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane, Hospital Road,
**JAFFNA.**
(சி-5590)

## BECON கல்வி நிலையம்

**கலை, வர்த்தகம்**
**A/L 89**
(ஒரு வருட வகுப்பு)
**பகல் நேர வகுப்புகள்**

| | |
|---|---|
| பொருளியல்: | வரதராஜன் |
| வர்த்தகம்: | ரட்ணம் |
| கணக்கியல்: | மரியதாஸ் |
| அளவையியல்: | S. S. மனோகரன் |
| தமிழ்: | தாஸ் |
| இந்துநாகரீகம் | ஜோதீஸ்வரன் |

**ஆரம்பம்:- 6-7-1988**
புதன் 7-00 a. m.

**BECON**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 5586) (ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## ஆறும் மாத நினைவஞ்சலி



**செல்வன் இ. பாலகேதீஸ்வரன் (ஈசா)**
(தொழில் நுட்பக்கல்லூரி மாணவன்)
**தமிழ் மண்ணில்: 28 - 8 - 1968**
**தமிழினத்தின் விடிவுக்காக: 6 - 1 - 1988**

அவர்களை வீழ்த்திட துடித்தன
உன் தோள்கள்
களத்தினில் பட்ட கடுங்காயத்துடன்
பலர்தனை வீழ்த்திய மாவீரா
மாறாத காயம் உன் பொன்னுடலை
தமிழ் மண்ணிலே வீழ்த்தியதே
ஆறாது நாமும் அழுகின்றோம்-மாதங்கள்
ஆறு ஆனபின்னும் தேறாதுதவிக்கின்றோம்
தீராது வெம்பகை, தீயவர் போகார்
உன் சிந்திய குருதியில் நனைந்த
தமிழ் மண்ணில்
வீரத்தின் வித்துக்கள் ஆயிரம் முளைக்கும்
உன் விடுதலை லட்சியம் வீண்போகாது
என்றோ ஒரு நாள் நல்வழி பிறக்கும்
நாம் உன் பாதையில் நடந்து செல்வோம்

அதுவரை உன் ஆத்மாவுடன் பேசத் துடிக்கும் உன் அன்பு நெஞ்சங்கள்

அம்மா, அண்ணமார், அக்கா,
தங்கை, நண்பர்கள்.
(5753)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. கந்தையா கதிரவேலு**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம்: 24-01-1916
மறைவு: 02-06-1988

இன்று 1ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை 2ஆந் திகதி சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் வந்து கலந்து சிறப்பித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலைமணி லேன்,
கட்டப்பராய். (4787)

## கோடி அற்புதங்கள் புரியும்

புங்குடுதீவு
அருள்மிகு அந்தோனியார் ஆலய

# வருடாந்த உயர் திருவிழா



**01-07-88: வெள்ளி; கொடியேற்றம் பிற்பகல் 4-30 மணி**

**03-07-88: ஞாயிறு காலை 8-00 மணி**

* திருவிழாப்பூசைப்பலி — நற்கருணைப்பந்தி
* அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி
* பக்தர்களுக்குப் புனிதரின் அருளாசி

திருவிழாக் குருக்கள்
**தவத்திரு: ரீ. யேசுதாசன் (சந்திரன்) அடிகள்**

"மனக்குறை நீங்க, இறையருள் வேண்டப் புனிதரின் விழாவில் ஒன்று கூடுவோம், வரம் வேண்டுவோம்"

★ இத்தலம் நோக்கி வரும் யாத்திரிகர்களுக்கு ஏற்ற வசதிகள் உண்டு.

★ 03. 07. 88ல் புனிதர் பேரானான நல்விருந்தில் பங்குகொண்டு மகிழுங்கள்.

**Karason Electricals**
(Electrical Contractors)
4, Stanley Road,
JAFFNA.

**நேசன்**
புடவை மாளிகை
புங்குடுதீவு.

**ஏ. பி. மகேந்திரன்**
ஸ்ரோர்ஸ்
புங்குடுதீவு.

**கோணேஸ்வரி**
கூல்பார்
புங்குடுதீவு.

(1565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி அரேபியா

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | எலெக்ரீசியன்ஸ் | - 3 | | 800 SR |
| (2) | கணக்காளர் | - 2 | | 1500 SR |
| (3) | சேல்ஸ்மன் | - 2 | | 1000 SR |
| (4) | லாப் - ரெக்னீசியன் | - 2 | 1200 SR — | 1400 SR |
| (5) | களஞ்சிய பொறுப்பாளர் | - 1 | | 1000 SR |
| (6) | கிளீனேர்ஸ் | - 100 | 350 SR | 100 SR |

# சவூதி அரேபியா

| | | | |
|---|---|---|---|
| (1) | வீல் லோடர் ஒப்பறேற்றர் | 3 | 220 US D |
| (2) | டம் றக் ஒப்பிறேற்றர் | 18 | 220 US D |
| (3) | கிறேன் ஒப்பிறேற்றர் | 3 | 220 US D |
| (4) | புல்டோசர் ஒப்பிறேற்றர் | 3 | 220 US D |
| (5) | எச்...ற்றர் ஒப்பிறேற்றர் | 3 | 220 US D |

# குவைற்

| | | | |
|---|---|---|---|
| (1) | சாரதி ...... (H.V.D) ........ (கல்ப் லைசென்சுடன்) | 25 | 60 KD |
| (2) | சாரதி ........ (H.V.D) ........ | 25 | 45 KD |
| (3) | குக் ........ (England) | 2 | 75 KD |
| (4) | கொம்பியூட்டர் ரெக்னீசியன் | 1 | 75 KD |
| (5) | ரிவி & றேடியோ ரெக்னீசியன் | 1 | 75 KD |
| (6) | ரெலக்ஸ் ரெக்னீசியன் | 1 | 75 KD |
| (7) | போட்டோ கொப்பி ரெக்னீசியன் | 1 | 75 KD |

# குவைற்

| | | | |
|---|---|---|---|
| (1) | டிறைவர் ........ H.V.D | 15 | 65 KD |
| (2) | டிறைவர் ........ L.V.D | 15 | 50 KD |
| (3) | கட்டுவேலை லேபர் ........ | 100 | 65 KD |
| (4) | பிளம்பர் ........ | 10 | 65 KD |
| (5) | கார் மெக்கானிக் ........ | 5 | 70 KD |
| (6) | கார் எலக்றீசியன் ........ | 10 | 70 KD |
| (7) | ஸ்பிறே பெயின்ரர் ........ | 10 | 70 KD |
| (8) | கிளீனேர்ஸ் ........ | 100 | 35 KD |

## ✶ கவுஸ் மெயிட்ஸ் - பணிப்பெண்கள் ✶

(1) கிறீஸ் — 300 US D — 9000

மிகக் குறைந்த கட்டணம் 3 கிழமையுள் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

(2) சிங்கப்பூர் - 200 Dollor
(3) குவைற் - 40 KD

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**A. தவச்செல்வம்**
**நெல்லியான் வீதி,**
**சுழிபுரம்.**

(C 5579)


# திருமலையில் சிங்கள மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு

## படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

திருகோணமலை ஜூலை 1

திருகோணமலையில் படிப்படியாக சிங்கள மக்களின் நடமாட்டம் தற்போது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இடம் பெயர்ந்த சிங்கள மக்களில் பெரும் பகுதியினர் மீண்டும் தங்கள் இடங்களில் குடியேறியுள்ளதே இதற்குக் காரணம்.

சிங்கள வியாபாரிகள் கூட மீண்டும் தங்கள் மரக்கறி, மீன் வியாபாரங்களைத் தொடங்கியுள்ளனர்.

மணிக்கூண்டுக் கோபுரத்தடியில் அதிக சிங்கள மக்கள் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை மத்திய வீதியில் வியாபாரம் செய்து வந்த சிங்கள மரக்கறி வியாபாரிகள் அனேகம் பேர் மீண்டும் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்களவருக்குச் சொந்தமான லொறிகள் தினமும் மரக்கறி வகைகள், தேங்காய் ஆகியனவற்றைக் கொண்டு வருகின்றன.

தமிழ் வியாபாரிகள் அவர்களிடத்திலேயே பொருள்களைக் கொள்வனவு செய்து கனகம்மில் சந்தையில் வைத்து விற்பனை செய்கின்றனர்.

கொழும்பு, கண்டி போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் தனியார் வாகனங்கள்யாவும் இதுவரை 41 ஆம் கட்டைச் சந்தியில் இருந்துதான் புறப்பட்டுச் சென்றன,

அதேபோல் தூர இடங்களில் இருந்து வரும் தனியார் வாகனங்கள் 4 ஆம் கட்டையிலேயே நிறுத்தப்பட்டு வந்தன.

ஆனால் இப்போது இந்த வாகனங்கள் யாவும்நகரத்திற்குள்ளே சென்று மணிக்கூண்டுக் கோபுரத்தடியிலும் அருகிலுள்ள பஸ் நிலையத்திலும் நிறுத்தப்படுகின்றன.

அதேபோல் இந்த இடங்களிலிருந்துதான் பிரயாணங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. தனிச் சிங்களத்தில் எழுதிய பெயர்ப் பலகையுடன் சில தனியார் வாகனங்கள் சேவையில் விடப்படுகின்றன.

இந்திய அமைதி காக்கும் பிரிவினரும் இலங்கைப் பொலீசாரும் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் நகரம் பூராவும் ஈடுபட்டுள்ளனர். நகரில் 10க்கும் மேற்பட்ட அமைதிப் படை முகாம்கள் இயங்குகின்றன. பஸ் நிலையத்தில் இரவு பகலாக அமைதிப்படையினர் காவல் புரிகின்றனர்.

(இ - 150)

## கொடிகாமத்தில் திருட்டு முயற்சி தோல்வி

கொடிகாமம் ஜூலை01

கொடிகாமப் பகுதியில் ஊரடங்கு வேளையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயன்றனர்.

ஆனால் பொதுமக்களின் ஒத்துழைப்பால் அவர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

கொடிகாமம் புகையிரத நிலைய வீதியில் திருடர் கோஷ்டி ஒன்று பலவந்தமாக வீடு ஒன்றினுள் நுழைய முயன்றபோது வீட்டில் உள்ளவர்கள் சத்தம் போட்டனர்.

அவலக்குரல் கேட்டு அயலவர்கள் தடியுடன் விரைந்தோடி வரவே திருடர் கோஷ்டி வேலி பாய்ந்து ஓட்டம் பிடித்தது. [சி-75]


கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டுள்ளது)

## 1. வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 10, 000 வரை வெற்றுச் சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம்விற்பனைக்குண்டு.
**விண்ணப்ப முடிவு திகதி 15. 07. 1988**
விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தில் 14. 07. 88 வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரம் ரூபா 10/ செலுத்தி சங்கச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீளளிப்பு வைப்புப் பணம் ரூபா 300/ ஆகும்.

## 2. இசூசு லொறி பழைய உதிரிப்பாக விற்பனை

இசூசு லொறி பழைய உதிரிப்பாகங்கள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு உண்டு.
14. 07. 1988 வரை உதிரிப்பாகங்களைக்காரியாலயத்தில் நேரில் பார்வையிடலாம்.

—பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்.

(C/5565)



**அகில இலங்கை கத்தோலிக்க நீதி சமாதான, அபிவிருத்தி ஆணைக்குழு தவக்காலத்தையொட்டி அகில இலங்கை ரீதியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்திய சுவரொட்டி கட்டுரைப் போட்டி முடிவுகள்:**

## சுவரொட்டிப் போட்டி 'ஸ' 12-20 வயது

1. பிருட்லி வலஸ் பெரெய்ரு - கண்டி
2. W. W. குளோட் துஷாரு பெர்னண்டோ - கட்டுநேரியா
3. பிரிசில்லா குணரட்ன - பம்பலப்பிட்டியா
4. ம. அன்ரன் விஜேஷான் விக்ரமரட்ன - அநுராதபுரம்
5. அ. கிறிண்டி நிமபல்சி - சென் மேரிஸ் றோ.க. தமிழ் பாடசாலை, ஊர்காவற்றுறை
6. ச்சம்பா சௌறத் - கட்டுநேரியா
7. துஷாறி சமிற்றிக்கா பிரிஸ் லெட்டசிங்கா - நீர்கொழும்பு
8. சஞ்சீவி மஞ்சாறி கெட்டியாதாச்சி - வென்னப்புவா
9. என். அரோமா - கேகாலை
10. W. A. பிரியந்தா யோசவ் தாமல் - மாறவில்லா

## சுவரொட்டிப் போட்டி 12 வயதுக்குட்பட்டவர்.

1. தனியா ரெட்றிக்கோ - நீர்கொழும்பு
2. பிறதிமால் சுநித்தா றனதுங்கா - கட்டுநேரியா
3. ஷிரோமா பிரியாந்தி சமறதுங்கா - மாறவில்லை
4. ஜீவனி கெட்டியாவுச்சி - கொழும்பு-7
5. மலைக்கா கன்னங்கரு - கொழும்பு-7
6. எஸ், சந்திரமோகன் - சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்
7. ஜெலான் அறுண - ,, ,,
8. டென்சில் பெர்னண்டோ - நாவலப்பிட்டியா
9. றட்ண விறுண்டா றண்டெனியா - மல்பிட்டி போயாகனே
10 றாஷான் சம்ற ஜெயக்கொடி - கொழும்பு-4

## கட்டுரைப் போட்டி முடிவு 12 — 20 வயது

1. அ. நிர்மலா குமாரி - யா/இளவாலை கன்னியர்மடம் இளவாலை
2. S. K. ஜெயபாஸ்கரதாஸ் - புனித பவனம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
3. J. அன்ரனி யூட் - யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்
4. அ. பாத்திமா ருணி - யா/இளவாலை கன்னியர்மடம் இளவாலை
5. ம. மௌன் நியுட்டன் - சம்பத்தரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்
6. S. வசந்தகுமார் - ,, ,,
7. ம. சுகன்றியா - கண்டி
8. W. L. சுஜீவா ஜெயசேன - இரத்தினபுரி
9. லாலாற்றி ருஜபச்ச - கண்டி
10. D. A. D. மங்கலி பிரியதர்ஷினி - மாறவில்லா

## கட்டுரைப் போட்டி 12 வயதுக்குட்பட்டவர்

1. ச்சமிலா வியான்னி - நாவலப்பிட்டியா
2. M. ஐவந்தா வாதனி - யா/ஊர்காவற்றுறை றோ. க. தமிழ் பாடசாலை ஊர்காவற்றுறை
3. மாறியன் ஜெயமாலி விருஜினி பெர்னண்டோ - பிட்டிபான
4. றுவான் சந்தான சில்வா - நீர்கொழும்பு
5. ச்சம்பிகா பிரியதர்சினி - புண்டலோயா
6. W. L. சுஜீலா மரேனி சில்வா - பொலனறுவா
7. சுபாசினி பெறேரு - கன்னியர் மடம் கண்டி
3. A. A. U. பாமிலா ருசி - யா/தாளையடி றோ. க. பாடசாலை தாளையடி யாழ்ப்பாணம்
9. சஸ்பிதா ஜெகநாதன் - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய்
10. சொலொய் யோன் - நாவலப்பிட்டியா

யாழ். மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் பின்வரும் முகவரியில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மனித முன்னேற்ற நடுநிலையம்**
நீயோகு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 5577]



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## மருத்துவ பீடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் என்னுல் பெற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. மருந்தியல் (ஃபார்மக்கொலொஜி) பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. ஒன்கொலொஜி பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு - என்டோமென்ற்)
5. எலும்பு முறிவு அறுவை சிகிச்சையியல் (ஓர்தோபெடிக் சேர்ஜரி) (அறக்கொடைத்தவிசு - என்டோமென்ற்)
6. நோயியல் (பத்தோலொஜி) / ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் / உடற்றொழிலியல் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை சிகிச்சையியல் (சேர்ஜரி) / உயிர் இரசாயனவியல் ஆகியவற்றில் சிரேட்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர்
7. நோயியல் (பத்தோலொஜி) / ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் / உடற்றொழிலியல் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை சிகிச்சையியல் (சேர்ஜரி) / உடலமைப்பியல் / உயிர் இரசாயனவியல் ஆகியவற்றில் தற்காலிக சிரேட்ட விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர்
8. உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் / உயிர்இரசாயனவியல் ஆகியவற்றில் உதவி விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர்
9. உடலமைப்பியல் / நோயியல் (பத்தோலொஜி) சமூக மருத்துவம் / மருந்தியல் (ஃபார்மக்கொலொஜி) ஆகியவற்றில் தற்காலிக செய்முறை காட்டுநர்

அறக்கொடைத்தவிசுப் பேராசிரியர், பேராசிரியர் பதவிகளுக்கான முடிவுத் திகதி: 03- 10- 1988
ஏனைய பதவிகளுக்கான முடிவுத் திகதி: 29- 07- 1988

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பப் படிவத்திற்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1/50 சத முத்திரை ஒட்டப்பெற்ற 23 X 10 ச. மீட்டர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு 23 X 10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையும் அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் நியதிச் சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1988 யூன் 25 ஆம் திகதி

(C 5568)



# பதவி-வெற்றிடம்

## புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம்

# பொதுமுகாமையாளர்

குறியீட்டு இலக்கம் 115/8

வயது:- 23 தொடக்கம் 50 வரை

வேதனம் 500 — 840 / 2025 — 30x8

(கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட படிகளும் வழங்கப்படும்)

**கல்வித்தகைமைகள்:**

1. மேல்மட்ட முகாமை / மேற்பார்வைத் தரத்தில் கூட்டுறவு வேலையாளர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது மேற்சொன்ன கூட்டுறவு வேலையாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தின் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத் தொழில் நிறுவனத்தில் மேல்மட்ட முகாமைத்துவ பதவியில் இருவருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் / உயர் பிரிவு / க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் மேல்மட்ட முகாமைத்துவப் பதவியில் 4 வருட அனுபவம்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 31-07-1988 ஆந் திகதிக்கு முன்னர் மேற்படி சங்கத்தின் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
மு / புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம்
(சி-5536)


★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரயாண ஒழுங்குகள்
## SAUDI

| | |
|---|---|
| Security Clerk | 500 & 100 |
| Food Service A T T | 350 & 100 |
| Cashiers | 550 & 100 |
| Driver - Mini Bus | 550 & 100 |
| Video Teck | 800 & 100 |
| Book Shop Boy | 400 & 100 |
| Medical Custodian | 400 & 100 |
| Stores Record Clerk | 550 & 100 |
| Receiving Clerk | 550 & 100 |
| Telex Operator | 500 & 100 |
| Security Supervisor | 600 & 100 |
| Security Guard | 375 & 100 |
| Fire Supervisor | 700 & 100 |
| English Typist | 600 & 100 |
| Welders Oxygen | 600 & 100 |

ஆங்கில அறிவு அவசியம்
முற்பணம் அறவிடப்படமாட்டாது

பிரயாணம் செய்ய எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் விசா வந்துபோகும் திகதி அறிவித்த பின்னர் போகாது விட்டால் கடவுச் சீட்டுத் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.

தொடர்பு:-

தலைமையகம்:
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னுகம்.

கிளை: 1
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
மயிலங்காடு,
ஏழாலை.

கிளை: 2
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி
வல்வெட்டி (V. V. T.)

(சி 5588)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
12 - 4 - 1906

உதிர்வு:
13 - 7 - 1987

திதி:
1 - 7 - 1988

விரசேகர மாப்பாண முதலியார்
வழித்தோன்றல்
அமரர்
**சிவகுருநாதர் தில்லையம்பலம்**

"ஊருக்குத் திமைகள் செய்து நாம் உள்ளம் மகிழ்வது பாவம் யாருக்கு தீமை செய்யாது நாம் வாழ்ந்து விடுவது லாபம்" என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

— குடும்பத்தினர்.

"தில்லைப்பதி"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(C 5564)

## மூன்ருவது நினைவஞ்சலி



நிர்வையூர் அமரர்
**மகேந்திரன் ஜெயரூபன் (ரூபன்)**

ஆண்டவன் படைப்பு 15. 03. 1962 — அலைகடல் பறிப்பு 30. 06. 1985

அன்புக்கனி நின்ற இடந்தை மறக்கலா மா
அழகு நிறை நின்னுருவை மறக்கலாமோ
இன்ப நகை மொழிகளைத்தான் மறக்கலாமோ
இனியவனே ஜெயரூபனை மறக்கலாமோ மா
உண்மையில் நீ பிரிந்து மூவாண்டு சென்றுலும்
ஓயாதுள்ளம் என்னிடத் தவிக்குதடா!
ஆத்ம சாந்தி எய்த நானக்கருள்

புரிக நீர்வைக்கந்தன்.
செகுமார், ஜீவன்,
பாஸ்கரன்.

(4777)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில்

# நிர்மாணக் கைத்தொழில்

## பயிற்சித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 1

உலக வங்கியின் அனுசரணையுடன் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வந்த நிர்மாணக் கைத்தொழில் பயிற்சித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு.கே. எஸ். இராசேந்திரா மேற்கொண்டு வருகிருர்.

மின் இணைப்பு வேலை, மேசன்வேலை, மரவேலை, நீர்க்குழாய் பொருத்தும் பயிற்சி நெறி போன்ற நான்கு பயிற்சி நெறிகளும் உலக வங்கியின் அனுசரணையுடன்கடந்த வருடம் நடைபெற்று வந்தன.

எனினும் கடந்த அக்டோபர் மாதம் அசம்பாவிதத்தின் போது இந்த பயிற்சி நெறிப் பிரிவுகளில் இருந்து பல உபகரணங்கள் களவாடப்பட்டன.

இதனை அடுத்து இப் பயிற்சி நெறிகள் தொடர்ந்து நடைபெற முடியாத நிலையில் ஸ்தம்பித்து விட்டன.

எனினும் கல்லூரி அதிபர் எடுத்துவரும் துரித நடவடிக்கை காரணமாக மீண்டும் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகள் மூலம் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## 12 தட்டச்சு இயந்திரங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 1

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்திற்கு கனடா அரசாங்கத்தின் உதவியினுல் பன்னிரண்டு தட்டச்சு இயந்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தட்டச்சு வகுப்புக்கள் கடந்த 2ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

வெகு விரைவில் சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ-கி)

## சேத விவரம் சேகரிப்பு

கோப்பாய் ஜூலை01

கடந்த வருட அசம்பாவிதங்களில் போது கோப்பாய் வடக்குப் பகுதிகளில் சேதமடைந்தவீடுகளின்விவரங்கள் கெயர் ஸ்தாபனம் சேகரித்து வருகிறது.

2000 ரூபாவுக்கு மேற்பட்ட சேத விவரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டன. (சி-72)

## தேடுதலும் தடுத்து வைப்பும்

திருகோணமலை, ஜூலை 01

கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் திருகோணமலையைச் சேர்ந்த சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, நிலாவெளி ஆகிய கிராமங்கள் இந்திய அமைதிப் படையினரால் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தேடுதலின் போது நூற்றுக்கும் அதிகமானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு திங்கள் மாலையில் விடுக்கப்பட்டனர். (ஓ-150)

## சமாதான நீதிவான்



யாழ்ப்பாணம் ஜூலை 1

திருநெல்வேலி கிழக்கு ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த திரு. இராசமணி ஸ்ரீராமன் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானுக நீதி அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரபல சோதிடக் கலாநிதியான திரு. ஸ்ரீராமன் நல்லூர் பிரதேச சபை யாழ் மாநகரசபை ஆகியவற்றின் உத்தரவு பெற்ற கட்டடப் படவரைஞரும் கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரி சட்டப்படிப்பு மாணவனும், நல்லூர் மக்கள் சன சமூக நிலைய, நல்லூர் மலர்மகள் நாடக மன்ற ஸ்தாபகரும், சமூக சேவையாளரும் ஆவார் (இ-10)

## நவீல்ட் மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 1

கைதடி நவீல்ட்செவிப் புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த போட்டிக்கு யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் கலாநிதி இ. எஸ். தேவசகாயம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (இ-க)


## புதுப்பிக்க பட்ட டயர்கள் விற்பனைக்கு

கீழ் காணும் அளவுள்ள புதுப்பிக்கப்பட்ட டயர்கள் (Re-built Tyres) விற்பனைக்குண்டு 550 / 560 / 615 / 13,520 / 590/600/700 / 14, 560 / 650 / 700/ 15, 600/ 650/16, 400/ 19. 700 / 750/ 825 / 900 / 20
தொடர்பு கொள்ளவும்

**நொர்தேண் இன்டஸ்றிஸ்**
**69, பிறவுண் வீதி,**
**கொக்குவில்.**

(4774)

## மலிவு விற்பனை

றெடிமேற் உடுப்புக்கள்
**10 ரூபா முதல் 125 ரூபா வரை**

சில்க் பொலியஸ்டர்: ஒரு மீற்றர் ரூபா 30/-
ஏ. சி பொலியஸ்டர்: ,, ,, ,, 45/-
துல்கிரிய } சித்தை ,, ,, ,, 20/-
பூகொட }

சேட்டிங் வகைகள்
**மீற்றர் 40ரூபா முதல் 65 ரூபா வரை**

கொட்டன் பொலியஸ்டர்: ஒரு மீற்றர் 22/50-
(ஹைபிறைற்)

வேட்டிகள், சாரங்கள் இன்னும் பல
இன்றே விஜயம் செய்யுங்கள்

**அங்கலின் காமன்ஸ்**
(மேல் மாடியில்)
24/1 [illegible]
யாழ்ப்பாணம்.

(C5581)

# M 3 TRAVEL'S
பெருமையுடன் வழங்கும்
# மத்திய கிழக்கு வேலைவாய்ப்புகள்

**சவூதி அரேபியா:**

1. **Wheel Loader Operator** (வீல் லோடர் ஒப்பிரேட்டர்) — 3 இடம் மட்டுமே
2. **Dump Track Operator** (டம்ப் டிறக் ஒப்பிரேட்டர்) — 18 இடங்கள்
3. **Crane Operator** (கிறேன் ஒப்பிறேட்டர்) — 3 இடங்கள்
4. **Bull Dozer Operator** (புல்டோசர் ஒப்பிறேட்டர்) — 3 இடங்கள்
5. **Cleaner's** (கிளினேர்ஸ்) (அல்கோதாரிக் கம்பனி) — 660 இடங்கள்

II. Ready Mix Concrete Factory (Cement)
(திடீர் கலவை கொங்கிறீட் தொழிற்சாலை)

1. களஞ்சியப் பொறுப்பாளர் (Store keeper) — 1 இடம்
2. விற்பனையாளர் (Salesman) — 2 இடம்
   வாகன சாரதிப் பத்திரத்துடன்
3. Labotary Technician — 2 இடம்
   தொழில் நுட்பப் ஆய்வாளார்
   (சிமெந்தில் அனுபவம் உள்ளவர்கள்)

**III. Kuwait (குவைற்)**
கிளினேர்ஸ் (Cleaners)
iv பணிப்பெண்கள் (House Maids)

செல்ல விரும்புவோர் கடவுச்சிட்டு கடவுச்சிட்டு முன்பக்க பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பணிப் பெண்கள் முழுநீளப் படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

● கடவுச் சீட்டும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

**நம்பிக்கை நாணயம் என்பவற்றுடன் பயணம் செய்ய இன்றே நாடுங்கள்.**
**உங்கள் தேவை எங்கள் சேவை**
தொடர்பு கொள்ளுங்கள்:

# M 3 TRAVEL'S
**T. இந்திரநாதன்**
**கல்லூரி வீதி, சோதிலேன்,**
**காங்கேசன்துறை.**
பஸ் வழி: 769, 763, 764.

(C-5598)

# வெற்றுச் சாக்கு விற்பனை

மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள 6683 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படும்வைப்புப் பணம் ரூபா. 1000/-ம் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா. 25/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப்பெற்றுக் கொள்ளலாம். இப்படிவங்களில் எழுதி அனுப்பப்படும் விலைமனுக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முடிவு திகதி:- 18.07.1988 மு.ப. 12 மணி

மேலதிக விபரங்களுக்கு "பொது முகாமையாளர், மன்னார் பலநோ. கூ. சங்கம், மன்னார்" என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 023/2335

[illegible] எம். கியாஸ்
பொதுமுகாமையாளர்

(சி 5583)


## முதலாம் வருட அன்பின் நினைவு



**திரு. செ. திருநாவுக்கரசு**
(சமாதான நீதிவான், முன்னைய நாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய நாள் உடுப்பிட்டி கிராம சபை உபதலைவர்)

அன்னை மடியில்: 15-07-1920 — ஆண்டவன்அடியில்: 12-07.1987

**திதி 01:07:1988**

தமிழ்த்தாயின் தவப்புதல்வனுய்,
பொதுமக்களின் தோழனுய்,
பொதுத்தாபனங்களின் தலைவனுய்
நீதியின் உறவிடமாய்
நேர்மையின் கருவூலமாய்
ஒற்றுமையின் சின்னமாய்
தெய்வத்தின் தூதுவனுய் வாழ்ந்து
உள்ளங்களில் வாழ்கின்ற 'சிங்கர்' எங்கே?
நினைவு கூர்கின்றது-
பெருவிருட்சமாக இருந்த நீங்கள் சரிந்து ஒருவருடமாகியும் உங்கள் நினைவால் நித்தமும் வாடுகிறோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்

கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
பெருமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
நண்பர்கள்.

(4611)

## 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு. சின்னப்பு - கந்தையா**
(அத்தத்தா)

மலர்வு: 1921 - 02 - — உதிர்வு: 1984 - 06 - 26

**திதி: 1988. 6. 30.**

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் நல்வழி காட்டி எவ்வித துன்பங்களும்எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! பெரும் விருட்சமாக இருந்து எங்களை விட்டுச் சென்று இன்றுடன் ஐந்து வருடமாகி விட்டன ஆயினும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலவில்லை. உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தில் நிழலாகத் தெரிகின்றது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**உறவினர், சுற்றத்தார்.**

திருமதி. சின்னப்பு கந்தையா,
"கந்தவாசா"
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(4786)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

**பொருள்:**
அரசருடைய குறிப்பை அறிந்து, தக்க காலத்தை எதிர்நோக்கி, வெறுப்பில்லாதவற்றையும் விருப்பமானவற்றையும் அவர் விரும்புமாறு சொல்லவேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
01-07-1988 ந. பெ. இல. 23


## அழிவுக்கு வழிகோலுவதா?

யாழ்ப்பாண நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும், வாராந்தம் சராசரி மூன்று பேர், வாகன விபத்துகளினால் மரணமாகின்றார்கள். பத்துக்கும் அதிகமானோர் விபத்துகள் காரணமாகப் படுகாயம் அடைகின்றார்கள்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிப் பதிவுகளில் இருந்து மேலெழுந்தவாரியாக திரட்டப்பட்ட தகவல்களில் இருந்தே மேற்கண்ட புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது.

குடாநாடு முழுவதிலும் நடக்கும் விபத்து மரணங்களைச் சரியாகக் கணக்கிட்டால் வாராந்தம் விபத்தினால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும்.

விபத்துகள் அதிகரிப்பதற்கு வீதி ஒழுங்குகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படாமை, வாகனப் பாவனை அதிகரிப்பு, போக்குவரத்து நெருக்கம், அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனங்களை செலுத்துதல். வாகனப் போக்குவரத்து அதிகரித்திருக்கும் அளவுக்கு வீதிகள் போதுமானவையாகவும் சீரானவையாகவும் இல்லாதிருத்தல் என்பனவே காரணங்களாகும்.

மக்கள் போக்குவரத்தும், அதற்கேற்றாற்போல வாகன எண்ணிக்கையும் அதிகரிக்கும்போது விபத்துக்களும் தாமாகவே அதிகரிக்கச் செய்யும். ஆனால் போக்குவரத்து ஒழுங்குகளைச் சீர்செய்வதன் மூலமும், சாரதிகள், பாதசாரிகள் கவனமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் நடந்துகொள்வதன் மூலமுமே விபத்துகளைத் தடுக்க முடியும்.

போக்குவரத்து ஒழுங்குகளைச் சரிவர அமுல் செய்வதில் ஈடுபட்டிருந்த பொலிசாரின் சேவை இப்போது இல்லை. அதனால் வாகனம் ஓட்டுநர்களையும், பாதசாரிகளையும் கண்காணிக்க எவரும் இல்லை என்ற நிலையாகி விட்டது.

இதனைப் பயன்படுத்தி, மற்றவர் நலனைச் சிறிதும் மனதிற் கொள்ளாமல், வாகனங்களைக் கண்டபடியும், அதிவேகத்துடனும் செலுத்தும் போக்கு மலிந்துவிட்டது.

அதுவே விபத்து மரணங்கள் அதிகரிக்க முழுமுதற் காரணமாகும்.

வாகன விபத்துகள் நடக்கும்போது மற்றவர்களுக்கு மட்டுமன்றித் தங்களுக்கும் ஆபத்து ஏற்படும் என்பதைக் கூட வாகன ஓட்டிகள் மறந்து விடுகின்றார்கள். அளவுக்கு விஞ்சிய வேகத்துடன் வாகனத்தைச் செலுத்துவதால், வீதி ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடிக்காததால் மற்றவர்களுக்கும் தனக்கும் ஆபத்து உண்டு என்பதை ஒவ்வொரு சாரதியும் பொறுப்புணர்ச்சியுடன் புரிந்து கொண்டால், பல விபத்து மரணங்களைத் தடுத்துக் கொள்ளலாம்; தவிர்த்துக் கொள்ளலாம்.

சாரதிகள் மட்டுமன்றி சைக்கிள் ஓட்டுவோரும், பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காவிடில் தமக்கும், மற்றவர்களுக்கும் ஆபத்து உண்டு என்பதை உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்வதும் மிக அவசியமாகும்.

சட்டங்கள் பலவும் மக்கள் நன்மையைக் கருதியே ஆக்கப்பட்டவை. அவற்றை அமுல் செய்ய, கண்காணிக்க எவரும் இல்லை எனும் போது மக்கள் அவற்றை மீறுவதற்குப் பதிலாக மிகக் கவனமாகப் பேணி, ஒழுகும் மனப்பக்குவம் எல்லாத் துறைகளிலும் அவசியமானதாகும்.

இல்லையேல் சமூகச் சீரழிவுக்கும், அழிவுக்கும் மக்கள் தாங்களாகவே வழிகோலுவதாக முடியும்.

## சாவகச்சேரியில் கோமாரி நோய்த்தடுப்பு ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 1

மாடுகளில் கோமாரி நோய் தடுப்புக்கான தடைமருந்து ஏற்றும் நடவடிக்கை சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பிரிவில் விரைவில் ஆரம்பமாகும்.

நாவற்குழி, மறவன்புலவு, தனங்கிளப்புப் பகுதிகளில் சில தினங்களில் தடைமருந்து ஏற்றும் வேலை தொடங்கும்.

இதுவிடயமாக இன்று முதலாம் திகதி தச்சன்தோப்பு கிராமசபை மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இப்பகுதி கால்நடை பண்ணையாளர்களுடன் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

தற்பொழுது சாவகச்சேரி, பளை ஆகிய பகுதிகளில் மாடுகளில் காணப்படும் நோய் கால்வாய் நோய் என்று தெரிவிக்கப்படுகிறது.

கால்வாய்நோய் வேகமாகப் பரவும் தன்மையுடையது. பாதிக்கப்பட்ட மாடுகள் சரியான பராமரிப்பின்மூலம் சுகமடையும் என சாவகச்சேரி அரசு மிருக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(இ)

கர்நாடக முதலமைச்சர்

# ராமகிருஷ்ண ஹெக்டே பதவி விலக வேண்டும்

## ஜனதா தலைவர் சந்திரசேகர் வேண்டுகோள்

பெங்களூர், ஜூன் 30

ஜனதாக் கட்சிக்குள் நிலவும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே பதவி விலகவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனதாக் கட்சித்தலைவர் சந்திரசேகரே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கர்நாடக சட்டசபையில் உள்ள ஜனதா எம். எல். ஏக்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதில் ஜனதா உயர்மட்டத் தலைவர்கள் அஜித்சிங், மதுதண்டவதே ஆகியோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

அந்தச் சமயத்திலே ஜனதாத் தலைவர் சந்திரசேகர் இந்த கோரிக்கையை திரு. ஹெக்டேக்கு விடுத்திருக்கிறார். (எ)

## பலஸ்தீனியர் கிளர்ச்சி; 2 பேர்பலி, 50 பேர்காயம்

ஜெரூசலம், ஜூன் 30

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரவேலிய இராணுவம் சுட்டதில் இரண்டு பலஸ்தீனியர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

காஸா, மேற்குக்கரைப் பிரதேசங்களில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனியர் மீது இராணுவத்தினர் சுட்டனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவன் 15 வயதுச் சிறுவன். 50 பேர் வரையில் காயமடைந்தனர். (எ)

## 'நவம்பர் 17' இயக்கம் உரிமை கோரல்

வாஷிங்டன், ஜூன் 30

கிரீஸ் நாட்டில் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் அமெரிக்கக் கடற்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்த சம்பவம் பற்றி தகவல் தருபவர்களுக்கு 5 லட்சம் டாலர் பணம் வழங்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இப்படை அதிகாரியின் கொலைக்குத் தாங்களே காரணம் என்று 'நவம்பர் 17' இயக்கம் உரிமை கோரியுள்ளது.

இது போன்ற தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தப் போவதாக அந்த இயக்கம் மேலும் அறிவித்திருக்கிறது. (எ)

# 'நாட்டின் இன்றைய பிரச்சினை எதிர்க்கட்சிகளே; ராஜீவ் அல்ல'

பெங்களூர், ஜூன் 30

நாட்டின் இன்றைய பிரச்சினை ராஜீவ் காந்தி அல்ல; எதிர்க்கட்சிகளே என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டின் ஆசிரியர் அருண் சௌரி தெரிவித்தார்.

பெங்களூரில் செவ்வாயன்று ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ராஜீவ்காந்தி பதவி விலக வேண்டும் என்ற கருத்து பெரும்பாலான மக்கள் மனதில் இருந்து வந்துள்ளது. அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள் நாட்டை ஆளும் அளவுக்குத் திறன் பெற்றவர்களா என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துள்ளது.

இ. காங்கிரஸ் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஒருவர் மற்றொருவரின் தேர்தல் ஏஜெண்டாகச் செயல்பட்டு வருகின்றனர். இ. காங்கிரசுக்கு மாற்றான, நிலையான அரசு ஏற்பட வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர வேண்டும்.

கட்சியில் இருந்து கொண்டே அவற்றைச் சீர்குலைக்க முயலுபவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும். ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரசேகரை அவர் மறைமுகமாகச் சாடினார்.

சமீபத்தில் ஜனதா கட்சி தலைமை பதவி குறித்து நடந்த சண்டை கட்சியிலுள்ள சில யோக்கியமற்ற தலைவர்களே இதற்குக் காரணம்.

எனினும் ராமகிருஷ்ண ஹெக்டே போன்றோர் அரசியல் நாகரீகம் கருதி சில உண்மைகளை வெளிப்படுத்தாததால் ஜனதா கட்சி இன்னும் உயிர் பிழைத்து செயல்பட்டு வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் ஜனதா அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டதற்கு சந்திரசேகரே காரணம். இதற்காக தேவெகௌடவை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

எந்தவித குறிக்கோளும் இல்லாமல், தங்களது சுயநலனைக்கருதியே சிலர் எதிர்க்கட்சியில் செயல்பட்டு வருகின்றனர். இதுவே எதிர்க்கட்சிகளின் இன்றைய முக்கியப் பிரச்சினை. இப்படி அருண்சௌரி சொன்னார். (எ-4)

வெளி உலகில்

# பாம்பன் பாலத்தை திறக்க ராஜீவ் தமிழ் நாடு வருகிறார்

பாம்பன் பாலம் அடுத்த மாதம் பிரதமர் ராஜீவ் காந்தியால் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாம்பன் பால திட்ட தலைமை அதிகாரி திரு. சீனிவாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

மண்டபத்துக்கும் பாம்பனுக்கும் இடையே இப்பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலம் மற்றும் வீதி வேலைகள் பூர்த்தியாகி விட்டன. அடுத்த மாதம் முதலாம் திகதி மத்திய அரசிடம் பாலம் ஒப்படைக்கப் படுகிறது.

ஜூலை 2 ஆவதுவாரத்தில் பாலத்தை திறந்து வைக்க பிரதமர் ராஜீவ் காந்தி வருவார். விழாவில் இணை அமைச்சர் சிதம்பரமும் கலந்து கொள்வார்.

இப்படி தலைமை அதிகாரி சீனிவாசன் சொன்னார். இதனிடையில், பாம்பன் பாலத்துக்கு 'காமராஜர் பாலம்' என்று பெயர்சூட்டும்படி மத்திய அரசுக்கு திராவிடர்கழகத்தலைவர்கி. வீரமணி கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

## மேலும் பரிசீலனை

மாஸ்கோ, ஜூன் 30

சோவியத் தலைவர் மிக்செயல் கோர்பச்சேவ் சமர்ப்பித்த ஜனநாயகத் திட்டம் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் மூன்றாவது தினமாக ஆராயப்பட்டது. [எ]

## மீட்பு

அங்காரா, ஜூன் 30

துருக்கியில் ஏற்பட்ட நிலச்சரிவில் புதையுண்ட 40 பேரின் சடலங்கள் ஒரு வாரத்தின் பின்னரே மீட்புப்படையினரால் மீட்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

சரியான விலாசம் இல்லாததால்

# கொக்குவில் தபாலகத்தில் தேங்கிக் கிடக்கும் ஜீ.சி.ஈ. அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம் ஜூலை 1

ஜீ. சி. ஈ சாதாரண தர விசேடபரீட்சைக்குத் தோற்ற உள்ள கொக்குவில் மாணவர்களின் அநுமதி அட்டைகள் சில சரியான விலாசம் இல்லாததால் விநியோகிக்கப்படாது கொக்குவில் அஞ்சலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அவற்றை தகுந்த ஆதாரங்களுடன் பெற்றுக் கொள்ளலாம் என்று கொக்குவில் தபால் அதிபர் திரு. ஏ. குணபாலசிங்கம் தெரிவிக்கிறார்.

அநுமதி அட்டைகளுக்கு உரியவர்களின் விபரம் வருமாறு:-

எஸ். சோதிலிங்கம், பி. கணேசகுமார், எஸ். கொன்ஸ்ரன்ரைன், வி. சந்திரகாந்தன், சி. என். மதிவதனன், பி. ஜெகதீஸ்வரி, ஏ. அருள்நிதி, டி. வி. செல்வராஜா, எஸ். ஶ்ரீதரன்.

ஆர். ராஜ்ேனஸ்வரன், எஸ். ரவிராஜ், கே. செல்லத்தம்பி, ஆர். வைகுந்தவாசன், என். பி. மேகநாதன், டி. நந்தகுமார், கே. கந்தசாமி, எஸ். சத்தியானந்தராணி, கே. கணேசரத்தினம், கே மணிவண்ணன், பி. சோதிலிங்கம், ரி. சத்தியேந்திரன்.

ரொசாறியோ ரவி சென்ஜோகன், எஸ். சிவானந்த சர்மா, நாகேஸ்வரி. (இ)

## சுன்னாகம் பிரஜைகள் குழு கூட்டம்

சுன்னாகம், ஜூலை 1

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை இரண்டாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 இக்கு சுன்னாகம் ஸ்ரீமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுகிறது.

முன்னாள் கல்விப் பணிப்பாளரும் பிரஜைகள் குழுவின் தலைவருமான திரு. இ. மாணிக்கவாசகர் தலைமையில் கூட்டம் நடைபெறும். (இ-27)

## அறிமுக வைபவம்

காங்கேசன்துறை, ஜூலை 1

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபராக திரு. வை. இராசையாவும், பிரதேசசபை விசேஷ ஆணையாளராக திரு. பொ. பாலசிங்கம் நியமிக்கப்பட்டதை அடுத்து அவர்களை அறிமுகம் செய்யும் வைபவம் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்து உரையாற்ற விருக்கிறார்கள். (இ-68)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாநகரசபை ஊழியர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக சடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற திரு. நா. சண்முகநாதனின் சேவையை பாராட்டும் முகமாக பிரியாவிடை வைபவம் இன்று நடைபெறும்.

இந்த வைபவம் சங்கத் தலைவர் திரு. செ. இராசரெத்தினம் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கப் பணிமனை முன்றலில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

வைபவத்திற்கு மாநகர ஆணையாளர் திரு. [illegible] கலந்து கொள்வார். (இ)

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி அளவுக்கு

# உயர் கல்வி போதியளவு வளர்ச்சி அடையவில்லை

## வேம்படி ஆண்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி என்பன வளர்ச்சியடைந்த அளவிற்கு இலங்கையில்உயர் கல்வி வளர்ச்சி அடையவில்லை. ஒரு இலட்சம் மாணவர்கள் ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றுகின்ற போதிலும் ஆறாயிரம் மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா கடந்த 28 ஆம் திகதியும் 29 ஆம் திகதியும் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 'கால இடைவெளியும், கால தாமதமும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் பி. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் 'ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னரும் ஜீ. சி. ஈ. உயர் தரப் பரீட்சைக்குப் பின்னரும் கிட்டத்தட்ட 22 மாதங்களை மாணவர்கள் கல்வியுடன் தொடர்பின்றி விரயம் செய்ய வேண்டியுள்ளது. இந்நிலை மாணவர்களை கல்வியில் இருந்து விடுபட்டுச் செல்ல வைக்கின்றது.

'மேலும் பல்கலைக்கழகங்களில் ஏற்படும் இடையூறுகள் தடைகள் என்பனவும் உயர் கல்வியை பாதிக்கின்றன. உயர்கல்வியில் வளர்ச்சி ஏற்படாத பட்சத்தில் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படும் என்கின்றார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் செல்வி சிரோன்மணி ராஜரத்தினம் உரையாற்றுகையில் மூன்றாம் உலகநாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் பெண்கல்வி அதிக வளர்ச்சி அடைந்துள்ளதை காணமுடிகின்றது என்றார்.

செல்வி எஸ். சின்னத்தம்பி தனது உரையில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் வரலாற்றில் முதலாவது திருமணமான பெண் அதிபர் என்ற பெருமையை தற்போதய அதிபர் திருமதி எ. ராஜரத்தினம் பெற்றுக் கொள்கின்றார்.

'எமது கல்லூரிகடந்த இரண்டு மூன்று வருடங்கள் தவிர்க்க முடியாத பல இன்னல்களைச் சந்தித்தது. அப்பொழுது பெற்றோரும், ஆசிரியர்களும், கல்லூரி அபிமானிகளும் தந்த ஒத்துழைப்பால் தான் இன்றும் நிமிர்ந்து நிற்க முடிகின்றது என்றார்.

அன்றைய நிகழ்ச்சியில் திரு. சிவானந்தனின் வேம்படி யாழ் கைவிளக்கு' என்ற கவிதை இடம் பெற்றது.

கல்லூரி மாணவிகளின் 'பழம் நீ' என்ற நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. (இ-5)

## சுன்னாகத்தில் இன்று கோமாரி தடுப்பு ஊசி

### நாளை மருதனாமடம் பகுதியில்

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் சுன்னாகம் கிளையினர் சுன்னாகத்தில் டபிள். எஸ். ஏ. பாமில் (பஸ்கன்பாம்)ஒருமாதத்துக்கு மேற்பட்ட பசு, காளைமாடுகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசி போடுவதற்கு யாழ். கால்நடை வைத்தியர் டாக்டர் நி. வருணலிங்கம் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மேற்படி பண்ணைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

கோமாரி நோய்க்கான தடுப்பூசி மருந்து குப்பி ஒன்றை உடைத்தால், 1 மணித்தியாலத்தில் 80 மாடுகளுக்கு போட்டு முடிக்க வேண்டும்.

ஆதலால் சகல கால்நடை வளர்பாளர்களும் காலை 6 மணிக்[illegible] மாடுகளைசுன்னாகம் புகையிரதநிலையத்தில்இருந்து தெற்கு புன்னாலைக் கட்டுவன் போகும் பாதையில் கொத்தியாலடி என்ற இடத்தில் நெல் சந்தைபடுத்தும் நிலையத்துக்கு அண்மையில் உள்ள 'மஸ்கன் பாமுக்கு' கொண்டு வரும்படி கேட்கப்படுகின்றனர்.

நாளை சனிக்கிழமை மருதனாமடம் பகுதியில் தடுப்பூசி யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய பயிற்சி நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மருதனாமடம், இணுவில், உடுவில பகுதி கால்நடை வளர்பாளர்கள் தமது மாடுகளை அந்த நிலையத்துக்கு காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில்கொண்டுவந்து தடுப்பூசி போடும் படி கோரப்படுகின்றனர். 80 மாடுகளுக்கு குறையாது வந்தால் மட்டுமே தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் என்று அறிவிக்கப்படு[illegible]

சமய சந்நிதிகளில்

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

சுன்னாகம், ஜூலை 1

ஏழாலை அருள்மிகு சுவர்ணாம்பிகா சமேத அம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்நடைபெறுகிறது.

இன்று வெள்ளி காலை 6. 30 க்கு கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. (இ-27)

## வயோதிபரை பதம் பார்த்த குண்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 1

வீட்டினுள் படுத்திருந்தவரை பதம் பார்த்தது துப்பாக்கிக் குண்டு.

புத்தூரைச் சேர்ந்த க. ஐயாத்துரை (வயது 70) என்பவருக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

திங்கட்கிழமை இரவு எட்டு மணி அளவில் பிரஸ்தாப வயோதிபர் வீட்டினுள் படுத்திருந்தார்.

அப்போது வீட்டுக்குச் சமீபமாக ஆளரவம் தெரிந்தது. வயோதிபர் படுக்கையை விட்டு எழும்ப முற்படுகையில் துப்பாக்கிக் குண்டு ஒன்று திடீரென வந்து அவரது காலைப் பதம் பார்த்தது.

அதனால் அவர் காலில் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-10)

## திருத்த வேலைகள்

கரவெட்டி ஜூலை 1

கரவெட்டி கிழக்கில் பிள்ளையார்கோவில் வீதி மற்றும் நெல்லியடி பிரதான வீதிகள் ஆகியவற்றில் திருத்த வேலைகள் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

01-07-88 - 10. 31-07/88


தித்திக்கும் சுவைமிக்கது
அண்ணா
டொபிகள்
இனிப்பு வகைகள்
அண்ணா தொழிலகம், இணுவில்.



# உதயன்

01 - 07 - 1988 வெள்ளிக்கிழமை



* மிளகாய்த் தூள்
மஞ்சள் தூள்
வீட்டுப் பாவனைக்குரிய முறையில் தயாரிக்கப்பட்டது
பாவனையாளர், மொத்த விற்பனையாளர்களுக்கு
விசேஷ கழிவுண்டு

அண்ணா தொழிலகம்
இணுவில்


## ஆயுதங்களை ஒப்படைத்தால்..

ஆமதிக்கப்படுவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனதுகடப்பாடுகளைச் சரிவர நிறைவேற்றினால் வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்தத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளை ஜூலை இறுதிவாரத்தில் இருந்து அரசு ஆரம்பிக்கும்.

சகல ஆயுதங்கள், வெடி மருந்துகள், வானொலித் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றை இலங்கை, இந்திய இராணுவ அதிகாரிகளிடம் சொல்லப்பட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்படைப்பின், இலங்கை அரசு ஜனநாயக நடைமுறையை உடனேஆரம்பிக்கும்.

வடக்கு — கிழக்கு மாகாணசபைக்குத்தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளரைஅரசு பணிக்கும்.

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு ஓர் ஆளுநர், ஒரு தெரிவு செய்யப்பட்ட முதல் அமைச்சர், தெரிவு செய்யப்பட்ட நான்கு அமைச்சர்கள் இருப்பர்.

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு ஒரு மேல் நீதிமன்றத்தையும் அரசாங்கம் நியமிக்கும்.

சிங்களத்துடன் தமிழையும் அரசகரும மொழியாக்குவதற்குத் தேவையான சட்டவாக்கங்களையும் அரசாங்கம் கொண்டுவரும்.

இந்த உறுதி மொழிகளுக்கு பிரதிபலனாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்றுமானால், அரசாங்கம் வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஜூலை இறுதியில் ஆரம்பிக்கும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா.பிரதமர் காந்திக்கு தெரிவித்திருக்கிறார். .. (இ-எ)

## ஆஸ்பத்திரி...

றன்.

நேற்று முன் தினம் வெளிநோயாளர் பகுதியில் வைத்து வயோதிபர் பெண்மணி ஒருவர் தனது சங்கிலியைப் பறிகொடுத்த சம்பவம் நடைபெற்றது.

இதனை அடுத்தே பொது மக்கள் தமது நகைகளில் மிகவும் அவதானமாக இருக்கும்படி ஆஸ்பத்திரி உயரதிகாரிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ஒ-10)


### இன்று திறப்பு விழா

சகல
* மோட்டார் சைக்கிள்
* சைக்கிள்
உதிரிப்பாகங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**ஞான முருகன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி - (சந்திக்கருகாமையில்)
(4788)



### United Engineers
**VACANCY**
**WORKS MANAGER**

We are looking for a qualified and experienced candidate to be the head of Metal Crusher, Saw-Mill, Heavy Fabrication & Carpentry Workshop, Welding-School, but also to add very substantially to the present volume of business.

Qualifications : Degree in Mechanical Engineering and 7 Years Work Experience.
or
N. D. T. Mechanical and 14Years Work Experience.

Salary : Negotiable and very attractive.
Interview : 03-07-1988 10-30 Hrs.
Venue :

UNITED ENGINEERS
SAI SAW MILL
91, RAMANATHAN ROAD,
KALLADY, JAFFNA.
(4789)



**ஹரன்** யாழ்நகர்— வெண்திரை
இன்றுமுதல் மகத்தான ஆரம்பம் !
புதியவெளியீடு! தினசரி 10. 30, 2. 30
* பாக்கியராஜ் * ராதிகா
* சுமித்ரா * செந்தில்
மற்றும் பலர்
**" பொய்சாட்சி "**
— வண்ணப்படம் —
( 4791 )


## வாக்குறுதி மட்டும்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)
அவர்கள் பின்வருமாறு வலியுறுத்தி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தம் மாகாண ஆளுநருக்கு முழு நிர்வாக அதிகாரங்களை வழங்குகிறது. அவசர நிலைப் பிரகடனத்துக்கான வரையறை செய்யப்படாத அதிகாரங்கள், மாகாண சபை நிர்வாகத்தை ஜனாதிபதியே மேற்கொள்ளுதல், மத்திய மாகாணத் தகராறுகளில் தலையிட உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்காமை, மாகாணசபைக்கு சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் பட்டியலை மாற்ற இலங்கை நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் இவை காரணமாக 13 ஆவது திருத்தத்தை ஏற்க முடியவில்லை.

ஜனாதிபதியின் விருப்பத்தின்படியும் மாகாண ஆளுநர் செயல்பட இலங்கை அரசியல் சட்டம் வகை செய்கிறது.

இத்தகைய முறை இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு விரோதமானதாம்.

மாகாணசபையில் பெரும்பான்மை ஆதரவு உள்ள மாகாண முதல்வர் மற்றும் அமைச்சர்களின் ஆலோசனைப்படி மாகாணசபையைக் கலைக்க ஆளுநருக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. பெரும்பான்மை ஆதரவு உள்ளதா இல்லையா என்பதை தீர்மானிக்க முறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே மாகாண முதல்வரின் அனுமதி இல்லாமல் மாகாணசபையை கலைக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த 154(ஜே) விதி திருத்தப்படவேண்டும்.

ஜூலைமாத ஒப்பந்தப்படி தமிழையும் ஆங்கிலத்தையும் ஆட்சி மொழியாக்க வேண்டும்.

நிலம்,குடியமர்த்துதல் முதலியவற்றில் மத்திய அரசுக்கு இறுதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் ஜூலை ஒப்பந்தத்துக்கு எதிரானது.

மாகாணக் கல்வித்துறையைப் பொறுத்த மட்டில் அரசியல் சட்ட விதி 154 ஜீ (6) மற்றும் 9 லிருந்து விதிவிலக்கு வழங்கவேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவோர் பிரிவினையை ஆதரிக்க மாட்டேன் என்று உறுதி எடுக்க வேண்டும். இது விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குகொள்ளத் தடையாக உள்ளது.

## ஜீ. சி. ஈ. . . .

தெரிவித்தார்.

இப்பரீட்சை பற்றி அமைதிப்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் நடைபெறுகின்ற இப்பரீட்சை ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற வேண்டும். அவ்வாறு நடைபெற எம்மாலான உதவிகளைப் புரிவோம் என்று அவர்கள் தெரிவித்தனர் என்று கல்விப்பகுதி அதிகாரி குறிப்பிட்டார்.


# 89 A/L
(WEEKEND CLASSES)
★ PHYSICS ★

திரு. வர்ணம்
பிரிவு (I) அனுமதியில்லை
பிரிவு (II) அனுமதியில்லை
பிரிவு (III) HEAT 7-30
ஆரம்பம் 2-07-88
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்)

NEW MASTER
INSTITUTE
B. M. C. LANE-JAFFNA
[C5592]



### புதிய உயர் கல்லூரி
A/L 89 1 வருட வகுப்புகள்

ஆரம்பம் : 2-7-88 காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| வர்த்தகம் | — | தேவா |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| புவியியல் | — | குணராசா |
| அரசியல் | — | குமார் |

பிறிட்டே English 2ஆம் பிரிவு
(ஆரம்பம்: 2. 7. 88)

விபரங்களுக்கு :
**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-5572)


## ஓராண்டு . . .

(1 ஆம் பக்க தொடர்ச்சி)
றது.

யாழ் அன்னையர் முன்னணியின் ஆதரவில் கொழும்பு நட்புறவுச் சங்கத்துடன் இணைந்த செயல்திட்டமாகஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம் நடைபெற்று வருகிறது.

ஜெய்ப்பூர்செயற்கைக்கால் திட்ட ஓராண்டு நிறைவுவிழா நிகழ்ச்சிகள் ஜெய்ப்பூர் தொழிற்சாலையிலேயே நடைபெறவுள்ளது.

பிற்பகல் விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-10)

## மூடும்....

கரமான நடவடிக்கைகள்பற்றியே ஆராயப்படஇருக்கிறது.

இது தவிர தங்களது செய்தியில் குறிப்பிட்டபடி வங்கிகளை மூடுவது பற்றிய நோக்கம் எதுவும் வங்கிக்கு இல்லை. இதனால் இது சம்பந்தமான எவ்வித கலந்துரையாடலும் நடைபெறமாட்டாது.

வங்கி மாங்குளத்தில் ஒரு கிளையையும் விரைவில் திறக்கவிருக்கும் இத்தருணத்தில் தங்களது செய்தி எமக்கு மிகுந்த வேதனையை அளித்துள்ளது. - இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## குடாநாட்டிற்கு...

இருந்த போதிலும் அண்மைக் காலத்தில் எருமை மாடுகள் இங்கு கொண்டு வரப்படுவது அதிகரித்துள்ளது பலருக்கும் ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது.

இது விடயமாக கால்நடை திணைக்கள அதிகாரி ஒருவரிடம் வினவிய போது அவர் கூறிய தாவது:-

தற்பொழுது நிர்வாகச் சீரின்மை நிலவுவதால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. எனவே கட்டுப்பாடற்ற முறையில் கால்நடைகள் கொண்டு வரப்படுகின்றன.

அவற்றுடன் இந்த எருமைகளும் பெருமளவில் கொண்டு வரப்படுவதை நாமும் அவதானித்திருந்தோம்.

தினமும் நூற்றுக்கணக்கான எருமைகள் குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஆனால் அப்படி ஏராளமாகக் கொண்டு வரப்பட்ட எருமைகள் எதனையும் குடாநாட்டில் காணமுடியவில்லையே? அவை எங்கே?

இப்படி அந்த அதிகாரி எமது செய்தியாளரிடம் திருப்பிக் கேட்டார். (ஒ - 9)

## பல்கலைக்......

ராஜினமாச் செய்திருந்தார்.

தற்பொழுது பதில் துணைவேந்தராகப்பேராசிரியர் எஸ். கணேசலிங்கம் கடமையாற்றி வருகின்றார். பதில் துணைவேந்தரின் பதவிக் காலம் மூன்று மாதங்களே.

நாளை நடைபெறவுள்ள கவுன்சில் கூட்டத்தில் மூவர் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகமானிய ஆணைக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

எனினும் இறுதித் தீர்மானத்தை உயர்கல்வி அமைச்சரான ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே மேற்கொள்வார். (ஒ-5)

## மரண அறிவித்தல்கள்

### V. S. இரகுநாதன் [ரஞ்சன்]

பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சந்திரசேகரஐயர் இரகுநாதன் [K.K.T.(pvt) Ltd கூட்டுநாயக்கா] 26-6-88 அன்று நீர்கொழும்பில் அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரஐயர் சிவகாமி அம்மாவின் அன்பு மகனும் வைத்தியநாதஐயர், இரவீந்திரநாதஐயர், ஜெகநாதஐயர், சந்திரவதனி, மங்களேஸ்வரி,மதிவதனி ஆகியோரின் அன்புச்சகோதரரும், இராஜேந்திரசர்மா, அமுதாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-06-88 நீர்கொழும்பில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
**தாய், சகோதரர்கள்.**
(5752)

### திரு. சுப்பிரமணியம் குமாரசாமி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரியாலையில் வசிப்பவரும், யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கடமையாற்றியவருமாகிய சுப்பிரமணியம் குமாரசாமி மினிபஸ் மோதி அகாலமரணமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கோணேஸ்வரன் (கனடா), நகுலேஸ்வரி, சண்முகராசா (இலண்டன்), இராசேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசபிள்ளையின் மாமனாரும், ராஜினி, பகீரன், சுறேன் ஆகியோரின் பேரனும், ஐயா என்று அழைக்கப்படும் குமாரசாமியின் மைத்துனரும், தனுஷ்கோடி, சோபாலபிள்ளை, பொன்னம்பலம், சிதம்பரம்மா ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (02 - 07 - 88) காலை 10-00 மணிக்கு 35, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் நடைபெறும்.

**தகவல்: க. கணேசபிள்ளை**
(4592)

### பத்மநாதன் சிவசுப்பிரமணியம்

பத்மநாதன் சிவசுப்பிரமணியம் அவர்கள் 29-06-1988 கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஜயலக்ஷுமியின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரி, ரட்ணகுமார்(கனடா) திருமதி ராஜேந்திரன், சொர்ணலக்ஷ்மி, ஸ்ரீ கிருஷ்ணகுமார் (கனடா), சித்தாலக்ஷ்மி, ஸ்ரீஸ்கந்தகுமார் (கனடா) டிலிப்குமார் (கனடா) வீரலக்ஷ்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ராகுலன், மீனுவினி ஆகியோரின் பாட்டாவுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்
**A. ராஜேந்திரன்**
அராலி வடக்கு.
(5751)

### சிவக்கொழுந்து திருஞானசுந்தரம்

97, சீனியர் லேன், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திரு. சிவக்கொழுந்து திருஞானசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சிவக்கொழுந்து(லிகிதர் P. W. D.) திருமதி வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த புதல்வனும், திருமதி அன்னலட்சுமியின் அருமைக் கணவரும், ஜெயந்தி (மேற்கு ஜேர்மனி), சாந்தி (ஆசிரியை, கிளி/ முழங்காவில் மத்திய மகாவித்தியாலயம்), வசந்தி (விஞ்ஞான பீடம், 3ஆம் வருடம், (யாழ் பல்கலைக்கழகம்) றங்கன் (மேற்குஜெர்மனி),ரமேஷ் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், இராஜேந்திராவின் (மேற்கு ஜேர்மனி) அருமை மாமனாரும், சுகன்யா, சுதர்சன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை கள் 97, சீனியர்லேன், நாச்சிமார் கோவிலடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 30-6-88 அன்று பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார் உறவினர் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

97, சீனியர்லேன்,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(4793)

### வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(குழந்தை)

வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் அம்பிகா ஸ்ரோர்ஸ் காரைநகர் உரிமையாளரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம், யோகேஸ்வரி, யோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திரிலோகநாயகியின் அன்பு மாமனாரும் சங்கீர்த்தனாவின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு 1-7-88 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. சுப்பிரமணியம்**
(4597)

### திரு. வி. எம். பரமநாதன்

காரைநகர் சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் இலக்கம் 55, அரசடி வீதியை வதிவிடமாகக் கொண்டவரும், இலக்கம் 47, காங்கேசன்துறை வீதி V. M. பரமநாதன் அன் சன்ஸ், இலக்கம் 74, பழைய சோனக தெரு, கொழும்பு, V. M பரமநாதன் அன் சன்ஸ் உரிமையாளருமாகிய திரு. வி. எம். பரமநாதன், 30. 6. 88 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு, காசிநாதர் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி, சற்முருகேசு, வரதராஜா, ஆனந்தராஜா, சற்குணராஜா, தயானந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலுப்பிள்ளை சண்முகரத்தினத்தின் (பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை, கொழும்பு) அன்பு மாமனாரும், வி. எம். சண்முகம் (உரிமையாளர் வி. எம். சண்முகம் அன் பிறதர், இலக்கம் 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா, வி. எம். கந்தையா (இளைப்பாறிய சிரேஷ்ட வருமானவரி மதிப்பீட்டாளர், உரிமையாளர், வி. முருகேஸ் ஸ்ரோர்ஸ் 140, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) வி. எம். பேரம்பலம் (பட்டயக் கணக்காளர், வி. எம். பேரம்பலம் அன்கோ யாழ்ப்பாணம். கொழும்பு விரிவுரையாளர் Nanyang University Singapore) செல்லம்மா யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகம் வேலுப்பிள்ளை (ஆசிரியர், யாழ்நகர் கலாசாலை, காரைநகர்) காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகரத்தினம் (மாவட்டத் தொலைத்தொடர்பு அதிகாரி D. I. T) காலஞ்சென்ற காசிநாதர் ஆறுமுகம், கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர், சுந்தரமூர்த்தி வித்தியாலயம், காரைநகர்) பாலசிங்கம், காலஞ்சென்ற காசிநாதர் சண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 55, அரசடி வீதி இல்லத்திலிருந்து 3. 7. 88 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, ஈமக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:-
(5755) **வி. எம். சண்முகம்**


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01-07-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday 01 st July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org